Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, COURT, ANNUR
Case No.C.C.No. 384/2023

Deposition of witness for Prosecution P.W.5 Date : 11.07.2025

| | | | |
|---|---|---|---|
| Name : | குலாப் ஜான் | Village : | கோவில்பாளையம் |
| Father's Name : | அப்துல் அஜிஸ் | Taluk : | அன்னூர் |
| Age : | 57 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of July 2025 **(Accused 1-4 absent. Sec. 355 BNSS petition filed and allowed)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை.**

நான் தற்போது கோவில்பாளையத்தில் குடியிருந்து பிக்கப் வாகனத்தில் டிரைவராக வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரி ஹசீம் அகமது கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சிக் கையொப்பம் என்னுடையது தான். தற்போது என்னிடம் காட்டப்படும் இரண்டு கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள முதல் சாட்சிக் கையொப்பங்கள் என்னுடையது தான். (**அந்த கையொப்பங்கள் மூன்றும் அ.சா.ஆ.2 முதல் 4 வரையாக குறியீடு செய்யப்படுகிறது**) மேற்படி கையொப்பங்களை நான் எப்போது எங்கு வைத்து செய்து கொடுத்தேன் என்று தற்போது ஞாபகம் இல்லை. இவ்வழக்கு தொடர்பாக என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியினை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அதனடிப்படையில் அனுமதி வழங்கு குறுக்கு விசாரணை**

ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்களில் சொல்லப்பட்டுள்ள நேரம், இடத்தில் வைத்து நான் கையொப்பம் செய்து கொடுத்ததாக போலீசார் என்னை விசாரித்த போது நான் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது ஞாபகம் இல்லை என்று உண்மைக்கு புறம்பாக சாட்சியமளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறிவிட்டார்.)

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.